**அசல் வழக்கு எண். 14/2022　　　　　　　　　தேதி-28.07.2025**

**பி.வா.சா. 2- பொன்செல்வன்**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. தாவா வழக்கில் மதியழகன் என்பவர் பிரதிவாதி என்றால் சரிதான். நான் அவரின் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். எனக்கு சொந்த நிலங்கள், குத்தகை நிலங்கள், தென்னை மரங்கள் ஆகியவை எனது குடும்பத்திற்க்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் எங்கள் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். எனது குடும்பம் விவசாய குடும்பம் என்றால் சரிதான். தாவா சொத்தின் விஸ்தீரனம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் ஆகும். தாவா நிலத்தில் என்ன சாகுபடி செய்துள்ளோம் என்றால் வாழை சாகுபடி செய்துள்ளோம். நெல், வாழை மட்டும் போட முடியும் என்றால் சரிதான். தாவா சொத்தின் ஒரு வருட குத்தகை ரூ.1200/- என்றால் சரிதான். அவ்வவ்போது விலை ஏறும் என்றால் சரிதான். தற்போது ரூ.1200/- ஆக உள்ளது.

2. மேற்படி ரூ.1200/- குத்தகையானது எனது தந்தை காலத்தில் இருந்து இருக்கிறது என்றால் சரிதான். சுமார் 50 வருட காலங்களாக மேற்படி அதே ரூ.1200/- குத்தகைக்கு தான் தாவா சொத்து உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து உள்ள இடத்தினை சுற்றி குஜாத்தினருக்கு பாத்தியப்பட்ட ட்ரஸ்ட் நிலம் உள்ளது என்றால் சரிதான். கோபால் தாஸ், விருச்சிஸ்லால், நாரணயண தாஸ், கன்சன் தாஸ் ஆகியோருக்கு பாத்தியப்பட்ட ட்டிரஸ் நிலங்கள் தாவா சொத்தை சுற்றி உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு வந்ததா என்றால் இல்லை. தாவா சொத்தில் ஒரு ஏக்கர் நிலத்தில் 1000 வாழை சாகுபடி செய்ய முடியுமா என்றால் சுமார் 800 முதல் 1000 வரை சாகுபடி செய்யலாம்.

3. வாழை, நெல் சாகுபடி செய்ய தண்ணீர் பாசனம் எப்போதும் இருக்க வேண்டும் என்றால் சரிதான். நல்ல வாழையாக இருந்தால் எத்தனை சீப்புகள் இருக்கும் என்றால் ஒவ்வொரு மரத்தை பொறுத்தும் மாறுபடும். ஒரு வாழை தார் சுமாராக ரூ.450 முதல் ரூ.500 வரை போகும் என்றால் ஒவ்வொரு நேரம் ஒவ்வொரு விலைக்கு போகும். ஒரு கட்டு வாழை இலை ரூ.250 முதல் ரூ.400 வரை விலை போகும் என்றால் சரியல்ல. சுமார் ரூ.50 முதல் ரூ.100 வரை விலை போகும். ஒரு வாழை பூ எவ்வளவு விலை போகும் என்றால் தெரியாது. 1000 வாழை பூ விற்றால் பத்தாயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும் என்றால் அது பற்றி தெரியாது. வாழை நார் எதற்கு பயன்படுத்தப்படும் என்றால் பூ கட்டுவதற்கு பயன்படும்.

4. வாழை நார் மூலம் ஒரு ஏக்கருக்கு ரூ.20000/- வரை சம்பாதிக்கலாம் என்றால் தெரியாது. ஒரு ஏக்கருக்கு வாழை மூலமாக ரூ.500000/- வரை லாபம் கிடைக்கும் என்றால் சரியல்ல. ஒரு லட்சம் வரும். நான் சொல்வது தவறு என்றும் ரூ.400000/-ற்கு குறையாமல் வருமானம் கிடைக்கும் என்றால் சரியல்ல. தோனான் என்கிற மதார் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அவர் எனக்கு தாய் மாமா ஆவார். அவர் மீது அசல் வழக்கு எண்.121/2006 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். அதில் நானும் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டேன். ஆனால் அதன் தீர்ப்பு எனக்கு தெரியாது.

5. மேற்படி வழக்கானது வாதி விருச்சிலால் தாஸ் என்பவருக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால் அது பற்றி தெரியாது. அசல் வழக்கு 252/2010 என்ற வழக்கிலும் ஒரு சென்ட்க்கு ரு.50 வீதம் தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. தாவா வழக்கு 1430 வது பசலி ஆண்டிற்கு மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் வாழை சாகுபடி செய்து அதிகபடியான வருமானம் ஈட்டி வருவதாலும், வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியும், பதில் அறிவிப்பு அனுப்பாமல் இருநததால் மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளதால், தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. விதை வாழை ரூ.1000 முதல் 5000 வரை விலை போகும் என்றும் அதிலும் எனக்கு லாபம் கிடைக்கும் என்றால் சரியல்ல.

**பி.சா.2 சாட்சி குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**